IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 123/2015 P.W.5 /L.W.8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சித்ரா | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. அமலதாசன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 04.12.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் இன்று ஆஜரில்லை என்பதால் சாட்சியை வழக்கின் தன்மைக் கருதியும் நீதியின் நலன் கருதியும் நிலையப்பொறுப்பு அதிகாரியின் முன்னிலையில் சாட்சியம் பதிவுச் செய்யப்படுகிறது.**

**1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அ.சா.1 ஐத் தெரியும். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் பக்கத்து வீடு. திருமணம் முடிந்து இருவரும் நன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள். 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வெளிநாட்டில் வேலைப்பார்த்து வந்தார். ஊருக்கு வந்தபோது ஒரு நாள் அடி நடக்கும் சத்தம் கேட்டது. நான் போய் பார்த்தபோது 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை பெண் வீட்டார்கள் அடித்துக்கொண்டிருந்தார்கள்.

2. அந்த சமயத்தில் 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கால் முன்னரே முறிந்து இருந்தது. நான் போய் விலக்கிவிட்டேன். சண்டை வேண்டாம் என்று சொன்னேன். பின்னர் அவர்களுக்குள் பிரச்சினை வந்து பிரிந்துவிட்டார்கள். என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.